OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11424

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.08.2026

Accepted: 10.09.2026

Published: 01.10.2026

Citation:
Kavith, K. "Tolkāppiyam's Meyppātu in The Creation of Characters." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 96–100.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11424

*Corresponding Author:
drtkavitha6662@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Tolkāppiyam's Meyppātu in The Creation of Characters

T. Kavitha
Assistant Professor, Department of Languages
Hindustan Institute of Technology and Science (Deemed to be University)
Chennai

Abstract
The Tolkāppiyam does more than lay down the rules of grammar; in its own way, it also offers an account of human psychology and of how that psychology expresses itself in action. This article examines how far this framework holds when it is applied to the analysis of modern novels. The study is based on novels that have won the Yuva Puraskar award.

Keywords: *Tolkāppiyam, Novel, Meyppātu, Character, Emotions, Anger, Weeping, Disgust.*

References

1. Tolkāppiyam.
2. Tavaci, Ma. Sēval Kaṭṭu (Cockfight). Pudumaipithan Pathippagam.
3. Malarvathi. Thūppukkāri (The Scavenger Woman). Mathi Veliyeedu.
4. Veerapandian. Parukkai (A Grain of Cooked Rice). Parisal Pathippagam.
5. Lakshmi Saravanakumar. Kānakan (The Forest Man). Ezhuthu Pirasuram.
6. Abilash, R. Kālkaḷ (Legs). Uyirmmai Pathippagam.
7. Karthik Balasubramanian. Naṭchattiravāsikaḷ (The Star Dwellers), Kalachuvadu Publications.

கதைமாந்தர் படைப்பில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

த. கவிதா
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை
இந்துஸ்தான் நிகர் நிலைப் பல்கலைக்கழகம், சென்னை

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியம் இலக்கணம் வகுத்தது மட்டுமல்லாமல் ஒருவகையில் மனித உளவியல் அதன் மூலமாக செயல்பாடுகள் ஆகியவற்றையும் நமக்கு அளித்திருக்கிறது. அதனை அடிப்படையாகக் கொண்டு நவீன புதினங்களை ஆய்வு செய்யும்போது அது எந்த அளவு பொருந்தி போகிறது என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது. யுவரஸ்கார் விருது பெற்ற புதினங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிச்சொற்கள்: *தொல்காப்பியம், புதினம், மெய்ப்பாடு, கதாபாத்திரம், உணர்வுகள், கோபம், அழுகை, வெறுப்பு.*

புதினக் கதைமாந்தர்களின் உளவியல் அடிப்படையில் வகைப்படுத்தும்போது அவர்களின் செயல் அல்லது குணத்திற்கான காரணம் தெரிந்து விடும். ஒரு சில பாத்திரங்கள் வேறுபட்ட சில குணங்களை வெளிப்படுத்துவதைப் யுவபுரஸ்கார் விருது பெற்ற புதினங்களில் காணமுடிகிறது. மனிதனின் அடிப்படை உணர்வுகளான மகிழ்ச்சி, கோபம், அழுகை போன்ற குணங்களை வெளிப்படுத்தும் பாத்திரங்களாகச் சிலர் படைக்கப்பட்டுள்ளனர்.

புதினங்களில் படைக்கப்படும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மைகளைக் கொண்டவையாக இருக்கும். அவை ஏற்றிருக்கும் பாத்திரத் தன்மைக்கேற்ப உணர்வுகளை வெளிப்படுத்துபவையாக இருக்கும். இதனைத் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டுடன் பொருத்திப் பார்க்கலாம்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப

என்கிறார் தொல்காப்பியர். இம்மெய்ப்பாடுகளின் தன்மைக்கேற்ப பாத்திரங்கள் புதினங்களில் இடம்பெறுகின்றன.

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளைத் தற்காலப் புதினப் பாத்திரங்களில் காண வேண்டியதன் தேவையென்ன என்ற ஒரு வினா எழுவது இயல்பு. புதினப் பாத்திரங்களில் மெய்ப்பாடுகளைப் பொருத்திப் பார்ப்பதன் வழியாக இரு மெய்மைகளைக் கண்டறிய இயலும். தற்காலப் புதின இலக்கியம் மேலை இலக்கியத்திலிருந்து தோன்றிய போதும் படைப்புகள் இன்றளவும் நிலம் சார்ந்தவையாகவே படைக்கப்படுகின்றன என்ற மெய்ம்மை, இயல் இரண்டில் விளக்கப்பட்டுள்ளது. மெய்ப்பாடுகளுடன் இவை விளக்கப்படும் போது பாத்திரப் படைப்புடன் மரபான உணர்வுகளையே வெளிப்படுத்துகிறது என்பதையும் அதற்கு நிலமும் மக்களின் பண்பாடும் துணையாக விளங்குகிறது என்பதையும் அறிந்து கொள்ள ஏதுவாகும்.

எண்வகை மெய்ப்பாடுகளும் அவற்றிற்கேயுரிய சூழ்நிலைகளில் வெளிப்படும் என்பது தொல்காப்பியர் கூற்று. அவ்வகையில் அமைந்த பாத்திரங்களின் தன்மையுடன் சேர்த்து விளக்கப் பெறும் போது போதிய தெளிவைத் தரவல்லவையாக அமையும்.

நகை

மெய்ப்பாடுகளில் முதன்மையாகக் கூறப்படுவது நகை என்பதாகும். நகை என்பதற்குச் சிரிப்பு என்று பொருள்.

> **"எள்ளல் இளமை பேதைமை மடனென்று உள்ளப்பட்ட நகை நான்கென்"[73]**

என்ற காரணிகளால் நகை தோன்றும் எனத் தொல்காப்பியம் வகைப்படுத்துகிறது. சேவல் கட்டு நாவலின் இடம்பெற்றுள்ள சேவுகன் என்ற கதைமாந்தர், நகை என்ற மெய்ப் பாட்டைத் தோற்றுவிக்கும் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார். வரி வசூலிக்கச் சென்ற இடத்தில் சேவல் கட்டில் விளையாடத் தெரியாத காரணத்தால் நகைப்புக்குள்ளாகிறார். அங்கு எள்ளலால் நகை தோன்றுகிறது. தோல்வியைக்களையும்பொருட்டுசேவுகன் வாங்கிச் சேர்க்கும் சேவல்களைக் கண்டு அவற்றின் அழகு, தோற்றம் இவற்றைக் கண்டு சேவகன் நகைக்கிறான். சேவல் கட்டில் ஈடுபட வேண்டாம் எனப் பேச்சி எச்சரிக்கும் போது அதில் நீந்திக் கரையேறி விடுவேன் என்ற சேவுகனின் அறியாமையைக் கண்டு பேச்சிக் கிழவி நகைக்கிறாள். சேவல்களைப் பயிற்றுவிக்கத் தெரியாமல் சேவல்கட்டில் படுதோல்வி அடைவதால் சேவுகன் அவனுடைய மடமை காரணமாக நகைப்புக்குள்ளாகிறான். இவ்வாறு சேவுகனின் பாத்திரப்படைப்பு நகை என்ற மெய்ப் பாட்டை வெளிப்படுத்துகிறது.

அழுகை

பொதுவாக அழுகை என்பது பெண்பாலுக்குரியதாகவே கட்டமைக்கப் பட்டுள்ளது. மரபு பெரும்பாலும் மீறப் படுவதில்லை.

> **"இளிவே இழவே அசைவே வறுமையென விளிவேள் கொள்கை அழுகை நான்கே"[74]**

என்கிறது தொல்காப்பியம். தனக்கு நேரும் அவலத்தைக் கண்டும் பிறருடைய அவலத்தைக் கண்டும் அழுகை தோன்றும். தூப்புக்காரிப் புதினத்தில் இடம் பெற்றுள்ள பூவரசியும் கனகமும் இம் மெய்ப்பாட்டினை வெளிப்படுத்தும் பாத்திரங்களாக உள்ளனர். சாப்பிடும் இடத்திலிருந்து வெளியேற்றப்படும் அவமானம் பொறுக்காமலும் தாயின் இறப்பினாலும் மனோ கைவிட்டு விட்ட கையறு நிலையிலும் பூவரசி அழுகை என்ற மெய்ப்பாட்டை வெளிப்படுத்தும் பாத்திரமாக விளங்குகிறாள். கனகம் வறுமை காரணமாகவும் தன் மகளை உயர்ந்த இடத்தில் திருமணம் செய்து கொடுக்க இயலாத நிலையிலும் தானமாகக் கிடைத்த உணவு பறிபோன நிலையிலும் அழுகையை வெளிப்படுத்துகிறான். அழுகை என்ற மெய்ப்பாட்டை வெளிப்படுத்தும் பாத்திரங்களாகப் பெண்களே அமைந்துள்ளனர்.

இளிவரல்

இளிவரல் என்பதற்கு இழிவு என்று பொருள். மானக் குறைவு, இகழ்ச்சி அல்லது தாழ்வு ஆகிய பொருள் பயின்று வரும்.

> **"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு யாப்புற வந்த இளிவரல் நான்கே"[75]**

என்று கூறுகிறது தொல்காப்பியம். பருக்கைப் புதினத்தில் இடம்பெறும் கதைசொல்லியின் நண்பர்களான செல்வா, சிலம்பு, சுரேஷ் ஆகிய பாத்திரங்கள் இழிநிலையை வெளிப்படுத்தும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளனர். பந்தி பரிமாறும் தொழிலில் பசிக்காக உணவுண்ணும் போதும் சிறு சிறு தவறுகள் இழைக்கும் போதும் இழிவுபடுத்தப்படுகின்றனர். தூப்புக்காரிப் புதினத்தில் இடம்பெறும் முத்தம்மாள் என்ற பாத்திரம் முதுமை காரணமாகவும் பணி காரணமாகவும் இழிவாக நடத்தப் படுகிறார்.

மருட்கை

> **"மருட்கை என்பது வியப்பைக் குறிக்கும். புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு மதிமை சாலா மருட்கை நான்கே"[76]**

என்பது தொல்காப்பிய நூற்பா. நட்சத்திரவாசிகள் புதினத்தில் இடம்பெறும் நித்திலன் பாத்திரம் வியப்பைப் பல இடங்களில் வெளிப்படுத்தும்

பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளது. மீராவின் நளினம், திட்டமிடுதல், அவளின் எதற்கும் அஞ்சாத நெஞ்சம் போன்றவற்றைக் கண்டு வியக்கிறான். அதேபோலத் தன் மேலதிகாரியான வேணுவின் தோற்றம், நடை, உடை போன்றவற்றைக் கண்டும் ஒன்றுமறியாத கிராமத்து இளைஞனாக அமெரிக்கா சென்ற விவேக்கிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் வியப்படைகிறான்.

அச்சம்

அச்சம் என்பது அனைவருக்கும் பொதுவான உணர்வே என்ற போதும் வரையறுக்கப்பட்ட பாத்திரப்படைப்பில் அச்ச உணர்வை வெளிப்படுத்தும் பாத்திரங்களாகச் சில பாத்திரங்கள் அமைகின்றன.

> **"அணங்கே விலங்கே கள்வர் தம் இறையென்ப**
> **பிணங்கல் சாலா அச்சம் நான்கே"**[77]

என்பது தொல்காப்பிய நூற்பா. மெய்ப் பாட்டை விளக்கும் நூற்பாக்களுள் ஏனையவற்றிலிருந்து இந்நூற்பா வேறுபடுகிறது. மற்ற மெய்ப்பாடுகளை விளக்கும் நூற்பாக்களில் சூழலோ அல்லது ஒரு தன்மையோ விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் நடமாடும் மாந்தர் தேவர், அணங்கு போன்றோர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கானகன் புதினத்தில் இடம்பெறும் பூசணி அச்சத்தை வெளிப்படுத்தும் பாத்திரமாக அமைந்துள்ளார். தற்காலத்தில் ஏற்படும் மாற்றங்களால் பளிச்சியின் கோபத்திற்கு ஆளாக நேருமோ என்ற பயத்துடன் வாழ்கிறார். பளியக்குடியைச் சேர்ந்த மக்கள் கஞ்சா தோட்டத்திற்கு வேலைக்குச் செல்வதால் தன் குலத்தின் கட்டுப்பாட்டை மீறிக் காட்டை விட்டுப் போய் விடுவார்களோ என்றும், காட்டைத் தங்களுடைய இலாபத் திற்காகச் சிதைப்பவர்களால் என்ன ஆபத்து நேருமோ என்றும், அரசாங்க அதிகாரிகளால் தங்கள் இருப்பிடத்திற்குத் தீங்கு ஏற்படுமோ என்றும் அச்சத்தை வெளிப்படுத்தும் பாத்திரமாகத் திகழ்கிறார்.

பெருமிதம்

எண் வகை மெய்ப்பாடுகளுக்குள் ஒன்றாகப் பெருமிதமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> **கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
> **சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே**[78]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதற்கு எடுத்துக்காட்டாக நட்சத்திரவாசிகள் புதினத்தில் இடம்பெற்றுள்ள விவேக் என்ற கதைமாந்தரைக் குறிப்பிடலாம். விவேக்கின் கல்வியே அவனுக்கு நல்ல வேலையையும் உயர்ந்த சம்பளத்தையும் பெற்றுத் தருகிறது. இதனால் ஏற்பட்ட ஊக்கத்தினால் வெளிநாடு செல்கிறான். தன் புகழை நிலை நாட்டச் சொந்த ஊரில் பெரிய வீட்டைக் கட்டுகிறான். சக ஊழியர்களுக்கு விருந்து கொடுக்கிறான். இச்செயல்களினால் அவனும் அவனைச் சார்ந்தோரும் பெருமிதமடையும் படி செய்கிறான்.

வெகுளி

வெகுளி என்பதற்குச் சினம் என்பது பொருள். எளியவர் முதல் வலியவர் வரை வெளிப்படுத்தும் ஓர் அடிப்படை உணர்வாக வெகுளி விளங்குகிறது.

> **"உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற**
> **வெறுப்பின் வந்த வெகுளி நான்கே"**[79]

என்பது தொல்காப்பிய நூற்பா.

கானகன் புதினத்தில் இடம்பெறும் தங்கப்பன், வெகுளி என்ற மெய்ப்பாட்டைப் பல இடங்களில் வெளிப்படுத்தும் பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளான். யானையின் தந்தத்தைப் பறித்து விற்பவனாகவும் காட்டு விலங்குகளைக் கொடூரமாகக் கொன்று குவிப்பவனாகவும் வாசியின் மீதான கோபத்தைத் தணிக்கும் பொருட்டு யானைகளை அலைக்கழித்துக் கொல்லும் பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளான். தங்கப்பனின் பாத்திர வெளிப்பாடு வெகுளி

என்ற மெய்ப்பாட்டிற்குச் சிறப்பாகப் பொருந்திப் போகிறது.

உவகை

உவகை என்பது மகிழ்வு என்ற பொருள் தரும். இதுவும் ஒரு மெய்ப்பாடாக வகைப் படுத்தப்பட்டுள்ளது.

> ***"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று***
> ***அல்லல் நீத்த உவகை நான்கே"***[80]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதற்குச் சிறப்பாக பொருந்திப் போவது கானகன் புதினத்தில் இடம்பெற்றுள்ள செல்லாயி என்ற கதைமாந்தர் படைப்பே. பளியக் குடியில் சடையனின் மனைவியாக இருந்த போதும் மகிழ்வுடனே வாழ்கிறாள். தன் மகிழ்ச்சிக்கான செயல்களை எவ்வாறேனும் நிறைவேற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்தவளாகவே செல்லாயி இருக்கிறாள். சடையனை இவள் விருப்பத்திற்காக வேட்டைக்கு அழைத்துச் செல்கிறாள். தங்கப்பனோடு சேர்ந்த பின்பும் அவனுக்கு ஏற்கனவே இரு மனைவியர் இருந்தபோதும் அவள் அதற்காகக் கவலையடையாமல் மகிழ்வுடனே வாழ்கிறாள். காமத்திலும் சிறு சிறு செயல்களிலும் தன் மகிழ்வைத் தக்க வைத்துக்கொள்ளும் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

முடிவுரை

தொல்காப்பிய மெய்ப்பாடுகளினூடாக பாத்திரங்களை ஆராயும்போது மெய்ப்பாடுகள் பொதுவானவையாகச் சொல்லப்பட்டிருப்பினும் சில பாத்திரங்களுக்கு மட்டுமே அவை முழுவதுமாகப் பொருந்தி போகின்றன. அங்ஙனம் பொருந்திப் போகும் பாத்திரம், தொல்காப்பியர் வரிசைப்படுத்தும் நிலைக் கலன்களை முழுமையாகக் கைக்கொண்டுள்ளது என்ற உண்மை புலனாகிறது. மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் பாத்திரப் படைப்பில் முதன்மைப் பாத்திரம் துணைமைப் பாத்திரம் என்ற வேறுபாடோ பால் வேறுபாடோ காணப்படவில்லை.

பயன்பட்ட நூல்கள்

1. தொல்காப்பியம்
2. ம.தவசி, சேவல்கட்டு, புதுமைப்பித்தன் பதிப்பகம்.
3. மலர்வதி, தூப்புக்காரி, மதி வெளியீடு.
4. வீரபாண்டியன், பருக்கை, பரிசல் பதிப்பகம்.
5. லக்ஷ்மி சரவணகுமார், கானகன், எழுத்து பிரசுரம்.
6. ஆர். அபிலாஷ், கால்கள், உயிர்மை பதிப்பகம்.
7. கார்த்திக்பாலசுப்ரமணியன், நட்சத்திரவாசிகள், காலச்சுவடு பதிப்பகம்.